Deputy Superintendent of Police,
Vigilance and Anti-Corruption,
Kallakurichi

**(Under Section 173 BNSS)**

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

8082321

C

1. District மாவட்டம் : கள்ளக்குறிச்சி  PS: காவல்நிலையம் : ஊ.த.க. பிரிவு  Year: ஆண்டு 2024  FIR No: மு.த.அ. எண் 05/2024  Date: நாள் 17.09.2024

2. (i) Act சட்டம்: the prevention of corruption act 1988 as amended by the prevention of corruption act 2018  Sections பிரிவுகள்: 12 and 07 of pc act
   (ii) Act சட்டம்:  Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: BNSS 2023  Sections பிரிவுகள்: 106 of BNSS
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்  Date from : நாள் முதல் 16.09.2024  Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு  Time from நேரம் முதல் 15.00  Time to : நேரம் வரை 22.30 hrs
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 16.09.2024  Time நேரம் : 23.45 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்  Time நேரம் :

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக தன்னியல்பாய் திடீர் சோதனை புகார்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 15 கி.மீ வடகிழக்கு
   Beat Number : முறைக் காவல் எண்  (b) Address : முகவரி சார்பதிவாளர் அலுவலகம், திருக்கோவிலூர்
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்  District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திருமதி ராஜேந்திரா  (b) Father's/ Husband's Name தந்தை / கணவர் பெயர் திரு கோபிநாதன்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு  (d) Nationality : நாட்டினம் இந்தியன்  (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள்  Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் [illegible] நல அலுவலர். கடலூர் [illegible] கள்ளக்குறிச்சி  (g) Address : முகவரி மாவட்ட [illegible] அலுவலர் அலுவலகம் கடலூர்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) 1. திரு. செல்வமுருகன் சார்பதிவாளர், திருக்கோவிலூர் 2. அலுவலக எழுத்தர் திரு பாண்டியன். 3. தனிநபர் திரு மணிகண்டன் 4. தனிநபர் திரு சேகர் 5. தனிநபர் திரு ரவிச்சந்திரன் 6. தனிநபர் திரு நடராஜ் 7. தனிநபர் திரு சங்கர் 8. தனிநபர் திரு பாலகிருஷ்ணன் 9. தனிநபர் திரு வீரமணி 10. தனிநபர் [illegible] 11. தனிநபர் திருமதி விஜயா

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / Involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில்
இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

P. Savithri 17/09/24

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

17/09/2024

Signature of the Officer In-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

K. SATHIYARAJ

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

17.09.2024

Name: பெயர் ..... DSP VAC
Rank: நிலை ..... No. எண் .........

KALLAKURICHI

பணிந்து அனுப்பப்படுகிறது. அய்யா, நான் இன்று 16.09.2024-ந் தேதி சுமார் 23.45 மணியளவில் நிலைய அலுவலில் இருந்தபோது விழுப்புரம், கடலூர் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்களின் துணை ஆய்வுக்குழு அலுவலர் திருமதி.இரா.சுமித்ரா, என்பவர் கொடுத்த புகார் மனுவை பெற்று இன்று 17.09.2024, 00.30 மணிக்கு கள்ளக்குறிச்சி ஊ.த.க பிரிவு குற்ற எண்.05/2024/KLK, u/s 12 and 7 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 and 106 BNSS-ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. வாதி கொடுத்த புகார் மனுவின் விபரம், அனுப்புநர், இரா.சுமித்ரா, மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், கடலூர், விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டம், கடலூர். பெறுநர், காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கள்ளக்குறிச்சி. ந.க.எண்:அ/493/2024, நாள்:16.09.2024. பொருள்:திடீர் ஆய்வு - கள்ளக்குறிச்சி மாவட்டம் - திருக்கோவிலூர் சார் பதிவாளர் அலுவலகம் - 16.09.2024 அன்று கள்ளக்குறிச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு - காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களுடன் திடீர் ஆய்வு - புகார் கொடுத்தல் - தொடர்பாக: பார்வை: திடீர் ஆய்வு மகஜர் நாள்:16.09.2024.

கள்ளக்குறிச்சி மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலரான திருமதி.சுமித்ரா ஆகிய நான் 16.09.2024-ம் தேதி எனது அலுவலகத்தில் பணியில் இருந்தபோது கள்ளக்குறிச்சி மாவட்டம் திருக்கோவிலூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திர பதிவுக்கு வரும் பொது மக்களிடம் ஆவண எழுத்தர்கள் மூலமும், புரோக்கர்கள் மூலமும் இலஞ்சம் பெறுவதாகவும், மேற்படி பெறப்பட்ட பணம் உடனுக்குடன் கைமாறி அலுவலகத்தைவிட்டு வெளியேறிவிடுவதாகவும், இன்றைய தினம் ஆவணி மாத கடைசி முகூர்த்த நாள் என்பதாலும், பல நபர்கள் பத்திரம் பதிவு செய்ய திருக்கோவிலூர் சார்பதிவாளர் அவர்களுக்கு அவர் கேட்ட படி பணம் கொண்டு வந்திருப்பதாகவும், எனக்கு கிடைத்த நம்பகமான தகவலின் அடிப்படையில் கள்ளக்குறிச்சி மாவட்டம், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் வந்து அங்கு பணியில் இருந்த திரு.த.சத்தியராஜ், காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களிடம், திருக்கோவிலூர் சார்பதிவாளர் அலுவலகத்தை திடீராய்வு செய்வது குறித்து கலந்தாலோசித்து அதன்படி நானும் ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவு காவல் குழுவினரும் உடனடியாக அரசு வாகனங்களில் புறப்பட்டு சுமார் 15.00 மணியளவில் திருக்கோவிலூர் சார்பதிவாளர் அலுவலகத்தினுள் சென்று அங்கிருந்தவர்களிடமும் சார்பதிவாளர் அவர்களிடமும் எங்களை அறிமுகப்படுத்திக் கொண்டு அவர்களிடம் அலுவலகத்தை திடீராய்வு செய்யப்போவதாக தெரிவித்துவிட்டு பின்னர், அவர்கள் முன்னிலையில் எங்களை சுய பரிசோதனை செய்த பின்பு மேற்படி அலுவலகத்தில் உள்ளவர்களையும், அலுவலகத்தையும் சோதனை செய்தபோது, அலுவலகத்தில் பின்னர் தெரிந்த 1) சார்பதிவாளர் திரு.வேல்முருகன் அவர்கள் வடக்கு நோக்கி போடப்பட்டிருந்த நாற்காலியில் அமர்ந்திருந்தார். 2) சார்பதிவாளருக்கு எதிரில் கிழக்கு புறத்தில் மேற்கு பார்த்தவாறு திருமதி.தேவி உதவியாளர் அவர்கள் இருக்கையும், அதனை ஒட்டினார்போல் 3) திருமதி.C.மகேஸ்வரி, கணிணி உதவியாளர் இருக்கையும், அதற்கு நேர் எதிர்தார் போல் 4) திரு.முருகையன், பதிவறை எழுத்தர், இருக்கையும் பதிவு வைப்பு அறையும், மேற்கு புறத்தில் இருந்த கேமரா அறையில் கிழக்கு பார்த்தவாறு 5) திருமதி.பிரியா அவர்களின் இருக்கையும் இருந்தது, மேற்படி நபர்களில் திருமதி. தேவி, உதவியாளர் மட்டும் அவரது இருக்கையில் இல்லை, அவரை பற்றி சார்பதிவாளரிடம் விசாரித்த போது, அவரது மகனுக்கு உடல்நிலை சரியில்லாததால் இன்று காலை அலுவலகத்திற்கு வந்து கையொப்பமிட்டு வீட்டிற்கு சென்று விட்டதாக கூறினார். அலுவலகத்தின் பத்திர பதிவு அறையில் சார்பதிவாளர் இருக்கைக்கு எதிரே பத்திரப்பதிவு செய்ய வந்த தனி நபர்கள் மற்றும் ஆவண எழுத்தர் 1) பாண்டியன் த/பெ

ராமசாமி பிள்ளை 2) திரு.மணிகண்டன் த/பெ ஏழுமலை 3) திரு.சேகர் த/பெ நாராயணன் 4) சிவா த/பெ சரவணன் 5) திரு.இரவிச்சந்திரன் த/பெ பத்மநாபன் 6) திரு.இரமேஷ் த/பெ இராமானுஜம் 7) திரு.சங்கர் த/பெ அண்ணாமலை 8) அலெக்ஸாண்டர் த/பெ கங்காதரன் 9) வீரமணி த/பெ கூத்தன் மற்றும் 10) திருமதி. வித்யா க/பெ சுப்ரமணியன் ஆகியோர் நின்றிருந்தனர். அதன் பிறகு நான், மேற்படி நபர்களை அவர்கள் இடத்தில் இருக்கும்படி அறிவுறுத்தினேன். பின்னர் எனது அறிவுறுத்தலின்படி காவல் குழுவினர் மேற்படி அலுவலகத்தையும், அங்கிருந்தவர்களையும் சோதனை செய்தபோது கீழ் கண்டவைகளில் கணக்கில் வராத தொகை கைப்பற்றப்பட்டது.

<u>திடீராய்வின்போது கைப்பற்றப்பட்ட கணக்கில் வராத ரொக்கப் பணம் விவரம்:</u>

1) அலுவலகத்தில் இருந்த, ஆவண எழுத்தர் திரு.பாண்டியன் த/பெ இராமசாமி பிள்ளை என்பவரை காவலர் உதவியுடன் சோதனை செய்ததில் அவரிடம் (500 x 5, 200 x 2, 100 x 1) ரூபாய்.3,000/- இருந்தது. மேற்படி தொகையை குறித்து கேட்க, அவர் தான் மாதவன் சன்ஸ் பெட்ரோல் பங்க் எதிரில் வித்யா மந்திர் பள்ளி வளாகத்தில் ஆவண எழுத்தர் வேலை பார்ப்பதாகவும் அவ்வபோது தன்னிடம் வரும் பொதுமக்களின் பத்திரப்பதிவினை பதிவு செய்வதற்கு திருக்கோவிலூர் அலுவலகத்திற்கு சார் பதிவாளர் திருமதி.வேல்முருகன் அவர்களுக்கு கொடுப்பதற்காக வைத்திருந்த இலஞ்ச பணம் என்று கூறினார். அதனால் மேற்படி தொகையினை விசாரணைக்காக கைப்பற்றினேன்.

2) பின்னர், அலுவலகத்தில் இருந்த திரு.மணிகண்டன் த/பெ ஏழுமலை என்ற தனிநபரை காவலர் உதவியுடன் சோதனை செய்ததில் அவரிடம் (500 x 51) ரூபாய்.25,500/- இருந்தது. மேற்படி தொகையை குறித்து கேட்க, அவர் தனது கொழுந்தியாள் திருமதி.சுதா அவர்கள் பெயரில் திருக்கோவிலூர் சார்பதிவாளர் ஆவண எண்.R/திருக்கோவிலூர்/ புத்தகம்-1/4365/2024-ன் படி பதியபட்ட ஆவணம் இது நாள் வரை கிடைக்கப்பெறாததால் மேற்படி ஆவணத்தை தயார் செய்து கொடுத்த ஆவண எழுத்தர் திரு.பாண்டியனை சந்தித்து கேட்டபோது அவர் மேற்படி நிலத்தை சார்பதிவாளர் நேரில் ஆய்வு செய்த பின்னர்தான் ஆவணம் கொடுப்பார்கள் என்றும் அதற்கு ரூ.1,25,000/- வரை அவருக்கு கொடுக்கவேண்டிருக்கும் என்றும் சொன்னதனால், நான் ரூ.25,500/- ரூபாயும் எனது தெருவை சேர்ந்த எனக்கு தெரிந்த திரு.சேகர் த/பெ நாராயணன் என்பவர் ரூ.1,00,000/-ரூபாயும் எடுத்து கொண்டு திருக்கோவிலூர் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சார்பதிவாளரை பார்த்து அவர் கேட்ட பணத்தை கொடுத்து வேலையை முடித்துக்கொள்ளலாம் என்று எடுத்துவந்திருப்பதாக கூறினார். மேலும், பத்திர பதிவு அலுவலகத்திற்குள் பணம் கொண்டுவரவேண்டிய அவசியமில்லாததால் மேற்படி தொகையினை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

3) பின்னர், அலுவலகத்தில் இருந்த திரு.சேகர் த/பெ நாராயணன் என்ற தனிநபரை காவலர் உதவியுடன் சோதனை செய்ததில் அவரிடம் (500 x 200) இருந்தது.ரூ.1,00,000/- இருந்தது. மேற்படி தொகையை குறித்து கேட்க, எனது கிராமத்தைச்சேர்ந்த எனக்கு தெரிந்த அவர் மணிகண்டனின் கொழுந்தியாள் திருமதி.சுதா அவர்கள் பெயரில் திருக்கோவிலூர் சார்பதிவாளர் ஆவண எண்.R/திருக்கோவிலூர்/ புத்தகம்-1/4365/2024-ன் படி பதிய பட்ட ஆவணம் இது நாள் வரை கிடைக்கப்பெறாததால் மேற்படி ஆவணத்தை தயார் செய்து கொடுத்த ஆவண எழுத்தர் திரு.பாண்டியனை அவர் சந்தித்து கேட்ட போது அவர் மேற்படி நிலத்தை சார்பதிவாளர் நேரில் ஆய்வு செய்த பின்னர்தான் ஆவணம் கொடுப்பார்கள் என்றும் அதற்கு ரூ.1,25,000/- வரை அவருக்கு கொடுக்கவேண்டிருக்கும் என்றும் சொன்னதனால் நான் ரூ.1,00,000/-ரூபாயும் எங்க தெருவை சேர்ந்த எனக்கு தெரிந்த மணிகண்டன் ரூ.25,500/- ரூபாயும் எடுத்து கொண்டு திருக்கோவிலூர் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சார்பதிவாளரை பார்த்து அவர் கேட்ட பணத்தை

கொடுத்து வேலையை முடித்துக்கொள்ளலாம் என்று எடுத்து வந்தோம் என்றும் கூறினார். மேலும், பத்திர பதிவு அலுவலகத்திற்குள் பணம் கொண்டுவரவேண்டிய அவசியமில்லாததால் மேற்படி தொகையினை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

4) பின்னர், அலுவலகத்தில் இருந்த திரு.சிவா த/பெ சரவணன் என்ற தனிநபரை காவலர் உதவியுடன் சோதனை செய்ததில் அவரிடம் (500 X 150) ரூ.75,000/- இருந்தது. மேற்படி தொகையை குறித்து கேட்க, அவர் தானும் திருக்கோவிலூரை சேர்ந்த கார்மல் ரினோலின் அனிஸ்டா என்பவரும் கடந்த 06.09.2024-ந்தேதி திருமணம் செய்து கொண்டதாகவும் மேற்படி திருமணத்தை பதிவு செய்ய தாங்கள் திருமணம் செய்து கொண்ட விவரத்தை திருக்கோவிலூர் சார்பதிவாளர் அலுவலகத்தின் அறிவிப்பு பலகையில் ஒரு மாதம் காலம் அறிவிப்பு செய்ய வேண்டும் என்றும் மேற்படி காலத்தில் எவ்வித ஆட்சேபணையும் ஏற்படாவிட்டால் அதிலிருந்து 120 நாட்களுக்குள் எப்போது வேண்டுமானாலும் தங்களது திருமணத்தை பதிவு செய்து கொள்ளலாம் என்று கூறியதால் மேற்படி திருக்கோவிலூர் சார்பதிவாளர் அலுவலகத்தின் அறிவிப்பு பலகையில் அறிவிப்பு செய்ய ஆவண எழுத்தர் அரசுகுமார் என்பவர் மூலம் திருக்கோவிலூர் சார்பதிவாளரை அனுகியதாகவும் கூறினார். அவரை மீண்டும் விசாரித்த போது இது குறித்து முன்னுக்கு பின் முரணாக பதில் கூறினார். மேலும், பத்திர பதிவு அலுவலகத்திற்குள் பணம் வைத்திருக்க வேண்டிய அவசியமில்லாததாலும் அதற்கான சரியான முகாந்திரம் இல்லாததாலும் மேற்படி தொகையினை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

5) பின்னர், அலுவலகத்தில் இருந்த, திரு.இரவிந்திரன் த/பெ பத்மநாபன் என்பவரை காவலர் உதவியுடன் சோதனை செய்ததில் அவரிடம் (500 X 8, 100 X 5) ரூ.4,500/- இருந்தது. மேற்படி தொகையை குறித்து கேட்க, அவர் தான் தனது அத்தை கிருஷ்ணவேனியிடம் இருந்து சித்தலிங்கமடத்தில் 94 செண்ட் நிலம் பெற்றதாகவும் மேற்படி நிலத்தை தனது மகனுக்கு தானமாக கொடுக்க பத்திரம் பதிவு செய்ய ஆவண எழுத்தர் அரசுகுமார் என்பவர் மூலம் திருக்கோவிலூர் சார்பதிவாளரை அனுகியதாகவும் கூறினார். அவரை மீண்டும் விசாரித்த போது முன்னுக்கு பின் முரணாக பதில் கூறினார். மேலும், பத்திர பதிவு அலுவலகத்திற்குள் பணம் வைத்திருக்க வேண்டிய அவசியமில்லாததாலும் அதற்கான சரியான முகாந்திரம் இல்லாததாலும் மேற்படி தொகையினை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

6) பின்னர், அலுவலகத்தில் இருந்த திரு.இரமேஷ் த/பெ இராமனுஜம் என்பவரை காவலர் உதவியுடன் சோதனை செய்ததில் அவரிடமிருந்து (500 X 1, 200 X 11 100 X 8) ரூ.3,500/- இருந்தது. மேற்படி தொகையை குறித்து கேட்க, அவர் தான் தனது தாயர் திருமதி. சந்திரா அவர்கள் அவர்களது பெயரில் திருக்கோவிலூர் செவலை ரோட்டில் உள்ள காண்கிரிட் வீட்டை தனது பெயருக்கும் தனது தம்பி பெயருக்கும் தானமாக கொடுக்க விரும்பியதால் மேற்படி வீட்டை நாங்கள் இருவரும் பெற்ற கொள்ள தானசெட்டில்மெண்ட் ஆவணம் பதிவு செய்ய வந்ததாகவும் திருக்கோவிலூர் சார்பதிவாளர் திரு.வேல்முருகன் அவர்களுக்கு கொடுப்பதற்காக வத்திருந்த இலஞ்ச பணம் என்று கூறினார். அதனால் மேற்படி தொகையினை விசாரணைக்காக கைப்பற்றினேன்.

7) பின்னர், அலுவலகத்தில் இருந்த திரு.சங்கர் த/பெ அம்மாவாசை என்ற தனிநபரை காவலர் உதவியுடன் சோதனை செய்ததில் அவரிடம் (500 X 5, 200 X 3, 100 X 4) ரூ.3,500/- இருந்தது. மேற்படி தொகையை குறித்து கேட்க, அவர் தான் தனது வீட்டை கிராம சக்தி நிதி நிறுவன அலுவலகத்தில் அடமாணம் வைக்க பத்திரம் தயார் செய்ய திருக்கோவிலூர் சார்பதிவாளர் அலுவலக எதிரே உள்ள ராகவேந்திரா என்ற நெட்சென்டர் மூலம் திருக்கோவிலூர் சார்பதிவாளரை அனுகியதாகவும் மேற்படி நிகழ்வை ஆவணமாக பதிவு செய்ய திருக்கோவிலூர் சார்பதிவாளர் திரு.வேல்முருகன் அவர்களுக்கு கொடுப்பதற்காக வைத்திருந்த இலஞ்ச பணம் என்று கூறினார். அதனால் மேற்படி தொகையினை விசாரணைக்காக கைப்பற்றினேன்.

8) பின்னர், அலுவலகத்தில் இருந்த அலெக்ஸாண்டர் த/பெ கங்காதரன் என்ற தனிநபரை காவலர் உதவியுடன் சோதனை செய்ததில் அவரிடம் (500 x 8) ரூ.4,000/- இருந்தது. மேற்படி தொகையை குறித்து கேட்க, அவர் தான் தனது வீட்டை ஆர்.பி.எல் நிதி நிறுவனத்தில் அடமானம் வைத்துள்ளதாகவும், அதனை ரத்து செய்து State Bank of India விற்கு கடனை MOD செய்ய திருக்கோவிலூர் சார்பதிவாளர் அலுவலகம் வந்ததாகவும் மேற்படி பணம் தனது செலவுக்காகவும், ஆர்.பி.எல் நிதி நிறுவனத்தில் இருந்து வந்த நபருக்காகவும் வைத்திருந்த தொகை என்று கூறினார். அவரை மீண்டும் விசாரித்த போது முன்னுக்கு பின் முரணாக பதில் கூறினார். மேலும், பத்திர பதிவு அலுவலகத்திற்குள் பணம் வைத்திருக்க வேண்டிய அவசியமில்லாததாலும் அதற்கான சரியான முகாந்திரம் இல்லாததாலும் மேற்படி தொகையினை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

9) பின்னர், அலுவலகத்தில் இருந்த வீரமணி த/பெ கூத்தன் என்ற தனிநபரை காவலர் உதவியுடன் சோதனை செய்ததில் அவரிடம் (500 x 20, 200 x 3, 100 x 4) ரூ.11,000/- இருந்தது. மேற்படி தொகையை குறித்து கேட்க, அவர் தனது மகன் வீரன் திருக்கோவிலூர் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு அவ்வப்போது வந்து அவருக்கு தெரிந்து நபர்களுக்கு சாட்சி கையெழுத்து போடுவார் என்றும், இன்றும் அது போல் வந்ததாகவும் அவருக்கு தெரிந்த நபருக்கு ரூ.10,000/-பணம் பத்திர செலவிற்கு தேவைப்படுவதாக கேட்டதால் நான் ரூ.10,000/-மும் என் கைசெலவிற்கு ரூ.1,000/-ம் எடுத்து வந்ததாக கூறினார். அவரை மீண்டும் விசாரித்த போது முன்னுக்கு பின் முரணாக பதில் கூறினார். மேலும், பத்திர பதிவு அலுவலகத்திற்குள் பணம் வைத்திருக்க வேண்டிய அவசியமில்லாததாலும் அதற்கான சரியான முகாந்திரம் இல்லாததாலும் மேற்படி தொகையினை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

10) பின்னர், அலுவலகத்தில் இருந்த திருமதி. விஜயா க/பெ சுப்பிரமணியன் என்ற தனிநபரை பெண் காவலர் உதவியுடன் சோதனை செய்ததில் அவரிடம் (500 x 66) ரூ.33,000/- இருந்தது. மேற்படி தொகையை குறித்து கேட்க, அவர் தனது ஊரை சேர்ந்த நிலாவதி என்பவர் தனக்கு சொந்தமான நிலத்தை விற்பனை செய்ய பத்திரம் போட வருவதாக சொன்னதாகவும் ரிஜிஸ்டர் செலவிற்காக பணம் வேண்டுமென்று கேட்டதால் பணம் ரூ.33,000/- எடுத்து வந்ததாக கூறினார். அவரை மீண்டும் விசாரித்த போது முன்னுக்கு பின் முரணாக பதில் கூறினார். மேலும், பத்திர பதிவு அலுவலகத்திற்குள் பணம் வைத்திருக்க வேண்டிய அவசியமில்லாததாலும் அதற்கான சரியான முகாந்திரம் இல்லாததாலும் மேற்படி தொகையினை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அதன் பின்னர், திருக்கோவிலூர் சார்பதிவாளர் அலுவலகத்தின் வடக்கில் அமைந்துள்ள கணினி அறை, கிழக்கில் அமைந்துள்ள பதிவுவைப்பு அறை, தெற்கில் அமைந்துள்ள பழைய பதிவுவைப்பு அறை மற்றும் மேற்கில் அமைந்துள்ள கேமரா தொழில் நுட்ப அறை, ஆவண வைப்பு அறை மற்றும் சார் பதிவாளர் அலுவலக வெளிப்புற வளாகம் ஆகியவற்றினை சோதனை செய்ததில் கைப்பற்றக்கூடிய பொருளோ, பணமோ ஏதும் இல்லை.

இந்த திடீராய்வின்போது மேற்படி வகையில் கைப்பற்றப்பட்ட கணக்கில் வராத மொத்த தொகை ரூ.2,63,000/- (ரூபாய் இரண்டு லட்சத்து அறுபத்து மூன்றாயிரம் ரூபாய் மட்டும்) ஆனது பத்திரப்பதிவுக்கு வரும் பொதுமக்களிடம் இருந்து இலஞ்சமாக பெற்றிருக்க கூடும் என விசாரணையில் தெரிய வருவதால் மேற்படி தொகையினை மேல் விசாரணைக்காக கைப்பற்றினோம்.

பின்பு அலுவலத்தில் இருந்த பதிவேடுகளான G கணக்குப் பதிவேடு, மற்றும் H கணக்குப் பதிவேடு, ஆகியவற்றை பார்வையிட்ட போது பதிவேடுகளில் குறிப்பிட்டுள்ள தொகைகள் அனைத்தும் ஆன்லைன் மூலம் பெறப்பட்டுள்ளது. ரொக்கமாக எந்த தொகையும் இவ்வலுவலகத்தில் பெறப்படவில்லை. மேலும் விசாரணைக்காக 1) வருகைப்பதிவேடு-2024, 2) தனி நபர் பண இருப்பு பதிவேடு-2024, 3) H கணக்குப் பதிவேடு மற்றும் 4) இயக்க பதிவேடு ஆகியவை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் G கணக்கு பதிவேடு பார்வையிட்டு திரும்ப அலுவலக வசமே ஒப்படைக்கப்பட்டது.

பிறகு அலுவலகத்தில் இருந்த சார்பதிவாளர் மற்றும் அலுவலகத்தினுள் இருந்தவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. இந்த திடீராய்வின்போது அலுவலர்கள் கண்ணியத்துடன் நடத்தப்பட்டார்கள். அலுவலக பெண் ஊழியர்கள் கள்ளக்குறிச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு தலைமை காவலர் திருமதி.தேவிகா என்பவர் உதவியுடன் விசாரணை செய்யப்பட்டார்கள். மேலும் அலுவலக உடமைகளுக்கு எவ்வித சேதங்களும் ஏற்படுத்தப்படவில்லை என்பது உறுதி செய்யப்பட்டது. இந்த செயல்முறை நடவடிக்கைகள் மற்றும் வாக்குமூலங்கள் கள்ளக்குறிச்சி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு மடிக்கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது. இந்த திடீராய்வு மகசர் இன்று 16.09.2024-ம் தேதி சுமார் 15.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு 16.09.2024-ம் தேதி இரவு சுமார் 22.30 மணிக்கு முடிக்கப்பட்டது.

மேற்படி சம்பவங்கள் அனைத்தும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள திடீர் ஆய்வு மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த திடீராய்வின்போது கைப்பற்றப்பட்ட இலஞ்ச தொகை மற்றும் திருக்கோவிலூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் கண்டெடுக்கப்பட்ட கணக்கில் வராத தொகைகள் மொத்தம் **ரூ.2,63,000/-** அளவிற்கு கைப்பற்றப்பட்டது. இது சம்மந்தமாக நான் கொடுக்கும் புகாரின் பேரில் சம்மந்தப்பட்ட அலுவலர்களான 1) திரு.வேல்முருகன், சார்பதிவாளர், திருக்கோவிலூர் சார்பதிவாளர் அலுவலகம், கள்ளக்குறிச்சி மாவட்டம் 2) பாண்டியன் த/பெ ராமசாமி பிள்ளை, ஆவணஎழுத்தர், திருக்கோவிலூர், கள்ளக்குறிச்சி மாவட்டம் 3) திரு.மணிகண்டன் த/பெ ஏழுமலை தனிநபர் 4) திரு.சேகர் த/பெ நாராயணன் தனிநபர் 5) சிவா த/பெ சரவணன் தனிநபர் 6) திரு.இரவிந்திரன் த/பெ பத்மநாபன் தனிநபர் 7) திரு.இரமேஷ் த/பெ இராமனுஜம் தனிநபர் 8) திரு.சங்கர் த/பெ அம்மாவாசை தனிநபர், 9) அலெக்ஸாண்டர் த/பெ கங்காதரன், தனிநபர் 10) வீரமணி த/பெ கூத்தன், தனிநபர் மற்றும் 11) திருமதி. விஜயா க/பெ சுப்பரமணியன், தனிநபர் ஆகியோர் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

Sir,

Received the above computer typed complaint on 16.09.2024 at about 23.45 hrs. Hence, I registered a case in Kallakurichi Vigilance and Anti-Corruption, Cr.No.05/2024/KLK, u/s 12 and 7 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 and 106 BNSS at 00.30 hrs today on 17.09.2024 and took up for Investigation sd xxxxxx on 17.09.2024 (K.Sathiyaraj) Deputy Superintendent of Police, V&AC, Kallakurichi).

The original FIR along with the original computer typed complaint in a sealed cover are sent to the Hon'ble Chief Judicial Magistrate, Kallakurichi and a copy of FIR is submitted to the Director of Vigilance and Anti-Corruption, Chennai.

17092024

(K.Sathiyaraj)
Deputy Superintendent of Police,
Vigilance and Anti-Corruption,
Kallakurichi.